இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தின் விவரங்கள் அளிக்கப்பட்டு உள்ளன. இதனை வரவு-செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக படிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

145. இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் எதுவும் தேர்தல் நன்னடத்தை விதிகள் கடைப்பிடிக்கப்பட்டுவரும் தருமபுரி மாவட்டத்திற்குப் பொருந்தாது.

146. தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு, தங்களைப் போன்ற சாதாரண, சாமானிய மக்களுக்காகவே இருக்கின்றது; அந்த மக்களுக்காகவே பணியாற்றுகிறது - தொண்டாற்றுகிறது என்று தமிழக மக்கள் அனைவரும் எண்ணிப் பெருமிதப்படும் அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்குக் கடமையாற்றும் பணியையே புனிதப் பணியாகக் கருதி, இடிப்பாரையும், இதயமார வாழ்த்து உரைப்பாரையும் ஒரே நிலையில் வைத்து, அவர்களின் ஆலோசனையைப் பெற்று - நாடும் மக்களும் நற்பயன் பெற நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும் என்று உறுதியளித்து, இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு என்னுடன் ஓய்வின்றி ஒத்துழைத்த நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அரசின் நிதித் துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு 2010-2011 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையை இப்பேரவைமுன் வைக்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அரசினர் தீர்மானம்

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று *(19-3-2010)* காலையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க பேரவை முன்னவர் அவர்கள் தமது தீர்மானத்தை முன்மொழியலாம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010 மார்ச் 19] [பேராசிரியர் க. அன்பழகன்]

"இன்று (19-3-2010) காலை நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, பேரவை விதி 25 (1), இரண்டாவது காப்புரையின்கீழ் பேரவை 25-3-2010 ஆம் தேதிவரை ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 26-3-2010 அன்று கூடும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் வெள்ளிக்கிழமை (26-3-2010) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

* * *